திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்,

பிறப்பிப்பவர் : திரு.ஆ.பெருமாள், எம்.ஏ., (பொருளாதாரம்), எம்.ஏ., (சமூகவியல்),

ந.க.அ5/29972/2021 நாள் 02.03.2022.

பொருள்:- பொதுப்பணி —— திருநெல்வேலி மாவட்டம் - 2020-2021-ஆம் ஆண்டு உதவியாளர் பட்டியல் வெளியிடப்பட்டது —— திரு.ஊ.மந்திரகுமார், முதுநிலை வருவாய் ஆய்வாளர் என்பவரது பணியினை முதுநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை:-
1. திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் அறிவிக்கை அ5/ப.வெ.812/2020 நாள் 01.02.2021.
2. திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறைகள் ந.க. அ5/29972/2021 நாள் 10.02.2022.
3. திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் திருத்திய அறிவிக்கை அ5/ப.வெ. 812/2020 நாள் 22.02.2022.
4. இவ்வலுவலக இதே எண்ணிட்ட குறிப்பாணை நாள் 23.02.2022.
5. திருநெல்வேலி வட்டாட்சியர் கடிதம் ந.க. அ6/03/2022 நாள் 24.02.2022.

----------

**ஆணை:-**

திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலகில் 2020-2021 ஆண்டில் இளநிலை வருவாய் உதவியாளர்கள், தட்டச்சர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர்கள் ஆகியோர்களில் 31 நபர்களுக்கு முதுநிலை வருவாய் ஆய்வாளராகப் பதவி உயர்வு வழங்கி பார்வை 1-ல் கண்டவாறு பட்டியல் வெளியிடப்பட்டு தனியர்களது பணியானது முதுநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் வரன்முறை செய்து பார்வை 2-இல் காணும் செயல்முறைகளின் படி ஆணையிடப்பட்டது.

இந்நிலையில், திருநெல்வேலி வட்டாட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளர் (தற்காலிகம்) ஆகப் பணிபுரிந்து வந்த திரு.ஊ.மந்திரகுமார் என்பவர் தனது பெயரினை 2020 ஆம் முதுநிலை வருவாய் ஆய்வாளர் பட்டியலில் சேர்த்திடக் கோரி மேல்முறையீடு அளித்ததன் பேரில் சென்னை வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து வரப்பெற்ற ஆணையின் பேரில் தனியரது பெயரான மேற்படி பட்டியலில் வ.எண். 27A ஆக சேர்க்கப்பட்டு பார்வை 3-இல் கண்டவாறு திருத்திய அறிவிக்கை வெளியிடப்பட்டது.

எனவே,இந்நேர்வில் தனியரது பணியினை முதுநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் தனியர் பணியில் சேர்ந்த நாளை அடிப்படையாகக் கொண்டு கீழ்க்கண்ட பட்டியலின் கலம் எண். 4-இல் கண்டவாறு பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பெயர், பதவி/ பணிபுரியும் அலுவலகம் | உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1. | திரு. ஊ.மந்திரகுமார்<br>முதுநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>திருநெல்வேலி | 21.05.2020 மு.ப. | 21.05.2020 மு.ப. |

மேற்கண்ட முதுநிலை வருவாய் ஆய்வாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

ஒம்./-மா.கணேஷ்குமார்,
மாவட்டவருவாய் அலுவலருக்காக,
திருநெல்வேலி.

பெறுநர்

சம்மந்தப்பட்ட நபர்.

நகல் : கோட்டாட்சியர், திருநெல்வேலி.
நகல் : வட்டாட்சியர், திருநெல்வேலி
நகல் : அ5 இருப்பு கோப்பிற்கு.

/உண்மைநகல்/

4/3/22

அலுவலக மேலாளர்(பொது)

(1/2)

02/03/2022